புரட்சிப்
பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • நவம்பர் (NOVEMBER) 12, 2026 • புரட்சி 26 • முழக்கம் (ISSUE) 46 • விலை(PRICE) ரூ.6.00

சென்னையில் தீபாவளி மறுப்பாளர்கள் ஒன்று கூடினர்

“நரகாசுரன்” வீரவணக்க நாள்

தீபாவளி நாளில் தீபாவளி மறுப்பாளர்கள் ஒன்றுகூடும் நிகழ்வு, கருத்தரங்கு, கலை நிகழ்ச்சிகளுடன் நடந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் இந்த நிகழ்வு குறித்து முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்கு பதிலளித்துப் பேசினார்.

தீபாவளியை மறுக்கும் ‘திராவிடர்கள் கூடுகை’ என்ற தலைப்பில் நரகாசுரன் வீரவணக்கநாள் சென்னை மாவட்டக் கழகம் சார்பில் கழகத் தலைமை அலுவலகத்தில் அக்.10, மாலை 5 மணியளவில் தொடங்கியது. “தீபாவளியன்று மண்டபம், அரங்குகள் வாடகைக்கு விடக்கூடாது என்று காவல்துறை அறிவுறுத்திய காரணத்தால்” நிகழ்வு திட்டமிட்டபடி அரங்கிலிருந்து கழகத் தலைமை அலுவலகத்துக்கு மாற்றப்பட்டது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் கலைக்குழுவான லதா, சத்யா, திராவிட மகிழன், உமாபதி குழுவினரின் எழுச்சி இசையுடன் தொடங்கியது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய “இரண்யன் அல்லது இணையற்ற வீரன்” நாடகத்திலிருந்து இரண்யன் மகன் பிரகலாதன் இறுதிக் காட்சியில் பார்ப்பனச் சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்ட தந்தையின் சடலத்தின் முன் தனது துரோகத்தை உணர்ந்து பேசிய காட்சியைப் கிராமிய இசைக்கலைஞர் வீரமணி சிறப்பாக நடித்துக் காட்டினார். பார்வையாளர்களிடையே இனமான உணர்வையும், பார்ப்பன எதிர்ப்பையும் உணர்ச்சிக் கடலில் மூழ்க வைத்தது இந்த நிகழ்வு. கடவுள், புராணங்களைப் பற்றிய தந்தை பெரியார் எழுதிய கட்டுரைகளை தோழர்கள் சூர்யாவும், தீபாவளி பற்றிய கட்டுரையை இரண்யாவும் வாசித்தனர். ஏராளமான புதிய தோழர்கள் வருகையோடு தலைமை அலுவலகம் நிரம்பி வழிந்தது. அனைவருக்கும் இரவு மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது. சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

‘கற்பிதங்களைக் கட்டுடைப்போம்’ என்ற தலைப்பில் கழகத் தோழரும் ஊடகவியலாளருமான ரவுத்ரா நடிகர்கள் மீதான பிம்பக் கட்டமைப்புகளை உடைத்துப் பேசினார். தொடர்ந்து பேசிய மருத்துவர் தாயப்பன் ஆளும் வர்க்கம் யார் (Ruling Class) என்பதை சரியாகத் தீர்மானித்தவர்கள் பெரியாரும் அம்பேத்கரும் தான். மக்களின் பொதுப் புத்தியில் திணிக்கப்பட்டுள்ள பார்ப்பனியச் சிந்தனைகளைக் கட்டுடைக்க வேண்டும் என்றார். இந்தக் கட்டுடைப்புக்கு நாம் நவீனகால பார்ப்பனரல்லாத சாதனையாளர்களைப் பாராட்டவேண்டுமே தவிர புராண காலத்துக்குத் திரும்புவதில் தனக்கு உடன்பாடில்லை என்று தனது கருத்து மாறுபாட்டை முன்வைத்தார்.

தொடர்ந்து பேசிய கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் இத்தகைய நிகழ்வுகள் ஏன் நிகழ்த்தப்படுகின்றன என்பதை விளக்கிப் பேசினார். அவரது உரை....

“2014-ம் ஆண்டு இதேபோன்று தீபாவளி நாளில் சென்னையில் கழகம் எதிர்ப்பு நிகழ்வு ஒன்றை நடத்திய போது இதே போன்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பார்ப்பனர்களையும் யாகங்களையும் எதிர்த்த அசுரர்களை அவதாரங்களாக வந்து சூழ்ச்சியால் விஷ்ணு கொலை செய்தான். பிராமணர்களை எதிர்த்தால் கொல்லப்படுவீர்கள் என்று இதன் வழியாக மக்களை அச்சுறுத்தினார்கள். அதனால்தான் பெரியார் புராண, இதிகாசக் காலத்திலிருந்து இங்கு நடப்பது ‘ஆரிய திராவிட போராட்டம்தான்’ என்று கூறினார். புராணங்கள் அனைத்தும் ‘சூத்திரர்கள்’ என்று அழைக்கப்பட்ட பார்ப்பனரல்லாதாருக்கு மட்டுமே எழுதப்பட்டவை; ‘பிராமணர்’களுக்காக அல்ல என்கிறார் அம்பேத்கர். வேதங்களை ‘சூத்திரர்கள்’ படிக்கக்கூடாது, காதில் கேட்கக் கூடாது மீறுவது தண்டனைக்குரிய கிரிமினல் குற்றம் என்று பார்ப்பனர்கள் மனு சாஸ்திரம் வழியாக சமூகக் கட்டளைகளைத் திணித்தார்கள். அப்போது தான் வேதங்களின், பார்ப்பன மேலாண்மையை மக்களிடம் திணிக்க புராணங்களும், இராமாயணம், மகாபாரதம் போன்றவைகளும் எழுதப்பட்டன. புராணங்கள் வரலாறுகள் அல்ல: ஆனால் அன்றைய சமூக எதார்த்தத்தில் இருந்து தானே இந்த கற்பிதங்கள் உருவாகியிருக்க முடியும்? பெரியாருக்கு இது குறித்து தெளிவான புரிதல் இருந்தது. பார்ப்பனர்களை எதிர்த்துப் போராடிய ‘அசுரர்களை’ பெரியார் பாராட்டி எழுதியிருக்கிறார். அசுரனான இரண்யன் ஒரு சுயமரியாதை வீரன் என்று பெரியார் எழுதினார்.

பாகவதம் என்ற புராணத்தில் இரணியன் குறித்து இவ்வாறு கூறப்பட்டு இருப்பதை பெரியார் எடுத்துக்காட்டுகிறார்...

“நமது எதிரிகளும் அற்பருமான தேவர்கள் விஷ்ணுவின் ஆதரவோடு எனது சகோதரன் இரணிய கசிபுவைக் கொன்றார்கள். அந்த மகாவிஷ்ணு ஒரு பாதகன், தந்திரக்காரன், அந்த விஷ்ணுவை வெட்டி வீழ்த்தப் போகிறேன். விஷ்ணுவைக் கொன்றால் தேவர்களும்,











தேவர் கூட்டங்களும் வேரற்ற மரம் போல் வீழ்ந்துவிடுவார்கள் ஆதலால் தானவர்களே! (மக்களே) நீங்கள் முதலில் ‘பிராமணர்கள்’ இருக்கும் இடம் சென்று தவசு வேத அத்யாயனம் செய்பவர்களைக் கொல்லுங்கள்; எந்தெந்த தேசத்தில் ‘பிராமணர்கள்’ இருக்கிறார்களோ, எந்தெந்த தேசத்தில் வேதம் ஓதப்படுகிறதோ, எந்தெந்த தேசத்தில் வர்ணாஸ்ரமத்துக்கு உரிய கர்மங்கள் நடக்கிறதோ, அந்த தேசத்தில் அவர்களை அக்கினியை வைத்துக் கொளுத்துங்கள்; நாசம் செய்யுங்கள் என்றான். உடனே அவர்கள் அவ்வாறு செய்து முடித்தார்கள். இதனால் தேவர்கள் மறைந்து சஞ்சரித்தார்கள்”.

-(பாகவதம் ஏழாவது ஸ்கந்தம் இரண்டாவது அத்தியாயம் 715, 716 பக்கங்கள்).

மலம் தின்னும் பன்றியும், மலம் சுமக்கும் பூமியும் பெற்ற பிள்ளை என்பதால் ‘நரகன்’ என்பதை குறிப்பிடும் வகையில் நரகாசுரன் என்று பெயரிட்டான் என்ற ஆய்வை பெரியார் முன்வைக்கிறார்.

ஆகவே **இரணியன் என்பதாக ஒருவன் அந்தக் காலத்தில் இருந்தானோ இல்லையோ** என்பது வாதத்துக்கு இடமான பிரச்சனையாக இருந்தாலும், அந்தக் காலத்திலேயே சுயமரியாதை இயக்கம் வீறுகொண்டு இருந்தது என்பதும் அதுவும், பலாத்காரத்தில் ஈடுபட்டு பிரச்சாரம் செய்தது என்பதும் அது பெரிதும் பார்ப்பனர்களை ஒழிப்பதும், வேத சாஸ்திரங்களையும் பார்ப்பனர்கள் வீடுகளையும் கொளுத்துவதும், கோயில்மடம், ஆசிரமம், கோபுரம் முதலியவவைகளைக் கோடரி, மண்வெட்டி கொண்டு இடித்து தரைமட்டமாக்கி இருப்பதும் நன்றாய் தெளிவாய் விளங்குகிறது.

இனியாவது பொதுமக்கள் சுயமரியாதை இயக்கத்தைக் குறைக் கூறாமல், அது நம்முன்னோர்களான சில வீரர்கள் செய்ததையும் அவர்கள் விட்டுப் போனதையும் தான் செய்கிறது என்பதாகக் கருதி இக்காலத்திற்கு ஏற்றபடியும் வேண்டிய படியுமான அளவிற்கு ஆதரவளிக்க வேண்டியது அவசியமாகும். இரணியன் ஒரு சுயமரியாதை வீரனே ஆவான்! இரணியன் கதை ஒரு சுயமரியாதைக் கதையேயாகும்” என்று பெரியார் எழுதினார்.

-குடிஅரசு, 26.2.1944

புராணக் காலத்தில் அரக்கர்களாக சித்தரிக்கப்பட்ட திராவிடர்களை ஆரிய எதிர்ப்புக்கு சுயமரியாதைக் கருத்துகளைப் பரப்புவதற்கு பெரியார் பயன்படுத்தினார். இந்தக் கண்ணோட்டத்தில் தான் இப்போது திராவிடர் விடுதலைக் கழகம் இந்த நிகழ்வுகளை நடத்துகிறது. திராவிடர்களுக்குப் பார்ப்பனர்களைப் போல வேதம் கிடையாது; அப்படி ஏதாவது இருக்குமானால் அவர்கள் பார்ப்பனர்களுக்கு எந்த வகையில் எல்லாம் அடிபணிந்து நடப்பது என்பது குறித்தும், அந்த அதிகாரம் திராவிடரல்லாத மற்றவர்களுக்கு திராவிடர்களை அச்சுறுத்துவதற்கு இருக்கின்றனவே தவிர திராவிடர்கள் தங்களுக்காக அவர்களே உருவாக்கிய வேதங்கள், புராணங்கள் என்று இல்லை, என்றார் பெரியார்.

“திராவிடர்கள் நாம் சமயம், வேதம், மதம், சாஸ்திரம் ஆகிய ஏதும் இல்லாத ஒரு நிபந்தனையற்ற திக்கற்ற அடிமைச் சமூகமாக இருந்து வருகிற ஒரு இழிவான தாக்கப்பட்ட சமுதாயமாகவே இருந்து வருகிறோம்” என்று கூறினார் பெரியார். குடிஅரசு (12.10.1940)

பன்றியும் பூமியும் புணர்ந்து பெற்ற பிள்ளையே நரகாசுரன். மலம் தின்னும் பன்றியும், மலம் சுமக்கும் பூமியும் பெற்ற பிள்ளை என்பதால் ‘நரகன்’ என்பதை குறிப்பிடும் வகையில் நரகாசுரன் என்று பெயரிட்டான் என்ற ஆய்வையும் பெரியார் முன்வைக்கிறார்.

நரகாசுரன் ஆட்சி நடத்தியது புராணத்தில் கூறப்படும் பிராக் ஜோதிட புரி (வங்காளத்துக்கு அருகே திராவிட நாட்டு எல்லையில் இருந்த பகுதி. இந்தப் பகுதியில் பிறந்த அத்தனை பேரும் இழிமக்கள் என்பதற்காகவே பன்றிக்குப் பிறந்தவர்கள் என்ற புராணத்தை எழுதினார்கள். இந்த இழிவை ஏற்க முடியுமா? என்று கேட்டார் பெரியார்.

தீபாவளி எதிர்ப்பை அதே தீபாவளி நாளில் திராவிடர்களாகிய நாம் இப்படி கூடுகையாக நடத்தலாமா? அது மற்றொரு தீபாவளி கொண்டாட்டம் ஆகாதா? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இந்தக் கேள்விக்கும் பெரியார் விடை தந்திருக்கிறார். தீபாவளி நாளில் அதற்கு எதிர்ப்பு நாள் நடத்துங்கள் என்று பெரியார் அறிவுறுத்தியதோடு, அதை எப்படி நடத்த வேண்டும் என்பதையும் விளக்கி இருக்கிறார்.

“தீபாவளியைத் திராவிடர்களாகிய நாம் ‘வெறுக்கும் தினமாக’க் கருதி, திராவிடத் தோழர்கள் அன்றைய தினம் **பழைய** கருப்பு உடைகளை, சட்டைகளை அணிந்து துக்கம் கொண்டாடும் பாவனையில் இந்த இழிவு பித்தலாட்டம் புராண ஆபாசங்கள் ஒழிய வேண்டும் என்கிற முழக்கத்துடன் ஊர்வலம் வந்து இந்தக் கதையை மக்களுக்கு எடுத்துச் சொல்லி உண்மையை உணரும்படி செய்ய வேண்டியது கடமையாகும்.

தொடர்ச்சி 2-ம் பக்கத்தில்

பார்ப்பன அதிகாரிகளின் வங்கிக் கொள்ளைகள்

பார்ப்பன ஆதிக்கத்தில்தான் வங்கிகள் செயல்படுகின்றன. பாரத ஸ்டேட் வங்கி மற்றும் ஹெச்.டி.எஃப்.சி வங்கிகளில் 80,000-க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களின் தகவல்கள் திருடப்பட்ட செய்தி அண்மையில் வெளிவந்தது. இந்த வங்கிக் கொள்ளை பற்றி டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு (அக்.30) அன்று எழுதியுள்ள தலையங்கம்....

நவீன பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் வங்கிச் சேவைகள் மீதான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வங்கிக் கிளை அளவில் நடைபெறும் மோசடிகள் சிதைக்கின்றன. வங்கிகள் வைப்புத் தொகைகளுக்கு வட்டி வழங்குகின்றன; முதலீடுகள் குறித்து ஆலோசனை அளிக்கின்றன; பாதுகாப்புப் பெட்டக வசதிகளையும் வழங்குகின்றன. ஆனால், சாமானிய மக்களைப் பொறுத்தவரை, தங்களுடைய பணத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான இடமாகவே வங்கிகள் முதன்மையாகத் திகழ்கின்றன.

டெல்லிக்கு அருகிலுள்ள கிரேட்டர் நொய்டாவில் செயல்படும் பஞ்சாப் நேஷனல் வங்கியின் (PNB) ஒரு கிளை, இந்த அடிப்படை நம்பிக்கையையே தகர்த்துள்ளது. நிலங்களை விற்றதன் மூலம் அண்மையில் கணிசமான பணம் பெற்ற கிராமப்புற வாடிக்கையாளர்களிடம் இருந்து சுமார் ரூ.35கோடி மோசடி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் வங்கி ஊழியர்களாக இருக்கலாம் எனத் தெரிகிறது. வாடிக்கையாளர்களின் அனுமதியின்றி அவர்களின் நிலையான வைப்புத்தொகைகளை (FD) முன்கூட்டியே முடித்து, அந்தப் பணத்தைத் தொடர்பில்லாத பிற வங்கிக் கணக்குகளுக்கு அவர்கள் மாற்றியுள்ளனர்.

'மவுண்ட்பேங்க்' (Mountebank) என்பது ஏமாற்றுப் பேர்வழிகள் அல்லது போலி ஆசாமிகளைக் குறிக்கும் பழமையான ஆங்கிலச் சொல். ஒரு வங்கி தனது வாடிக்கையாளர்களின் அடிப்படை நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்கும் இத்தகைய செயலுக்கு 'மவுண்ட்பேங்கிங்' (Mountebanking) என்று பெயர் சூட்டுகிறோம். துரதிர்ஷ்டவசமாக, இத்தகைய வங்கி மோசடிகள் அரிதானவை அல்ல. கடந்த ஆண்டு, ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை நினைவுகூர்வோம். அங்கு, ஐசிஐசிஐ வங்கியின் முன்னாள் வாடிக்கையாளர் உறவு மேலாளர் (Relationship Manager), இரண்டு ஆண்டுகளில் வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்குகளில் இருந்து ரூ.4.6 கோடியை முறைகேடாகக் கையாடல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். அவர் இதை எப்படிச் செய்தார்? வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்குகளுடன் இணைக்கப்பட்டிருந்த தொலைபேசி எண்களை மாற்றிவிட்டார். இதனால், அவர்களின் கணக்குகளில் நடைபெறும் பணப் பரிவர்த்தனைகள் குறித்த எச்சரிக்கைச் செய்திகள் வாடிக்கையாளர்களுக்குச் சென்றடையவில்லை.

2024ஆம் ஆண்டு டெல்லியிலும் இதேபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றது. ஐசிஐசிஐ வங்கிக் கிளை மேலாளர் ஒருவர், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியப் பெண் ஒருவரிடம் இருந்து ரூ.13.5 கோடியை மோசடி செய்ததாகக் கூறப்படுகிறது. அவர் போலியான வங்கிக் கணக்குகளை உருவாக்கி, அவற்றுக்குப் பற்று அட்டைகள் (Debit Cards), காசோலைப் புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கி, அந்தப் பெண்ணின் பணத்தை வேறு கணக்குகளுக்குத் திருப்பிவிட்டார். 2023ஆம் ஆண்டு, பேங்க் ஆஃப் பரோடா (BoB) வங்கியின் ஊழியர்கள், 362 வாடிக்கையாளர்களின் கணக்குகளுடன் அவர்களுக்குத் தெரியாத தொலைபேசி எண்களை இணைத்து, அவர்களின் கணக்குகளில் இருந்து ரூ.22 லட்சத்தைத் திருடியதாகத் தகவல்கள் வெளியாகின. இந்த மோசடிகள் எதுவும் உயர்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்யப்பட்டவை அல்ல. மாறாக, இவை நம்பிக்கையைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஏமாற்று வேலைகள் அல்லது வங்கிகளின் உள்நாட்டுக் கட்டுப்பாட்டு அமைப்புகளில் ஏற்பட்ட தோல்விகளாகும். குறிப்பாக, முக்கியமான பணப் பரிவர்த்தனை ஒன்றைச் செய்வதற்கு இரு வேறு நபர்களின் அனுமதி அவசியம் என்ற 'மேக்கர் - செக்கர்' (Maker-Checker) நடைமுறை தோல்வியடையும்போது இத்தகைய மோசடிகள் நடைபெறுகின்றன.

வங்கி ஊழியர்கள் கூட்டுச் சதி செய்வது, இணையத் தொடர்பு துண்டிக்கப்படும் நேரங்களில் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இணையமில்லா நடைமுறைகளைத் தவறாகப் பயன்படுத்துவது அல்லது பணியிலிருந்து விலகிச் சென்ற முன்னாள் ஊழியரின் உள்நுழைவுக் கடவுச்சொற்களை (Login Credentials) தற்போதைய ஊழியர் தவறாகப் பயன்படுத்துவது போன்ற பல்வேறு காரணங்களால் இத்தகைய மோசடிகள் நடைபெறுகின்றன. பல நேரங்களில், வாடிக்கையாளர்களின் பணத்தைத் திருடிவிட வேண்டும் என்பது மட்டுமே மோசடியில் ஈடுபடுபவர்களின் நோக்கமாக இருப்பதில்லை. மாறாக, அவர்களுடைய பணத்தைப் பயன்படுத்தி ஆதாயம் அடைந்துவிட்டு, யாருக்கும் தெரியாமல் அந்தப் பணத்தை மீண்டும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கிறது.

கோட்டாவில் நடைபெற்ற அய்.சி.அய்.சி.அய் வங்கி மோசடியில் ஈடுபட்ட வாடிக்கையாளர் உறவு மேலாளர், முறைகேடாகப் பெற்ற பணத்தைக் கொண்டு பங்குகளை வாங்கினார். ஆனால், அந்த முதலீட்டில் அவருக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. சில நேரங்களில், வங்கிகள் தங்களுடைய ஊழியர்களுக்கு அளிக்கும் செயல்திறன் இலக்குகளை அடைவதற்கான அழுத்தமும் இத்தகைய மோசடிகளுக்குக் காரணமாகிறது. பேங்க் ஆஃப் பரோடா மோசடியில், வாடிக்கையாளர்களை வங்கியின் கைப்பேசி செயலியில் (Mobile App) இணைக்க வேண்டும் என்று ஊழியர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதனைப் பயன்படுத்தி, வாடிக்கையாளர்களுக்குத் தெரியாமல் அவர்களின் கணக்குகளுடன் வேறு தொலைபேசி எண்களை இணைப்பதற்கான வாய்ப்பை ஊழியர்கள் உருவாக்கிக்கொண்டனர். இத்தகைய மோசடிகள் நடைபெற்ற பிறகு, வங்கிகள் வாடிக்கையாளர்களின் பணத்தைத் திருப்பிக் கொடுக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், ஒவ்வொரு மோசடிச் சம்பவமும் வங்கித் துறையின் மீதான மக்களின் நம்பிக்கையை உலுக்கிவிடுகிறது. பொதுவாக, புதிதாக வங்கிச் சேவைக்குள் வந்துள்ள கிராமப்புற மக்கள் மற்றும் மூத்த குடிமக்களே இத்தகைய மோசடிகளால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இவர்கள்தான் மிகவும் எளிதில் இலக்காக்கப்படக்கூடிய பிரிவினராக உள்ளனர்.

இத்தகைய மோசடிகளைக் கட்டுப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கியும் (RBI), நிதிச் சேவைகள் துறையும் (Department of Financial Services) இன்னும் கூடுதலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வங்கிகளின் உள்நாட்டுக் கண்காணிப்பு மற்றும் சரிபார்ப்பு நடைமுறைகளை வலுப்படுத்துவதுடன், இத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மிகக் கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட வேண்டும்.

விமர்சனங்களுக்கு விடுதலை இராசேந்திரன் பதில்

முதல் பக்க தொடர்ச்சி..

மற்றபடி அன்று எண்ணெய் முழுக்கு, புது வேட்டி அணிதல், வீட்டில் பலகாரம் செய்து சாப்பிடுதல் முதலியவை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். தீபாவளி கொண்டாட வேண்டாம் ஆரிய சூழ்ச்சி என்பதை எழுதுதல்; எழுத்துக்கள் முலம் காட்டமாக மக்களுக்கு விளக்க வேண்டும். இந்தக் கூட்டத்தில் அரசியல் பேச்சு, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் முதலிய கட்சி பேச்சு பேசக் கூடாது" என்று பெரியார் எழுதியிருக்கிறார். - குடிஅரசு 12.10.1946

தீபாவளிக்கான எதிர்ப்பை தீபாவளி நாளிலேயே நடத்த வேண்டும்; அதுவும் புதுச்சட்டை இல்லாது **பழைய** கருப்புச் சட்டை உடைகளை அணிய வேண்டும் என்று எழுதினார். எனவே அரக்கர்களைக் கொண்டாடி ஆரியப் புரட்டுகளை விளக்கும் நாளாக பின்பற்ற வேண்டும் என்ற பெரியார் காட்டிய கொள்கை வெளிச்சத்தோடு தான் திராவிடர் விடுதலைக் கழகம் இந்த நிகழ்வை நடத்துகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெரியாரும் திராவிடர் இயக்கமும் நடத்திய பண்பாட்டுப் புரட்சியின் அடிநாதமாக புராண, இதிகாச கட்டுடைப்புகள் இருந்திருக்கின்றன. அண்ணா 'கம்ப ரசம்' எழுதினார்; ராமாயணம் எரிக்கப்பட வேண்டும் என்று தமிழறிஞர்களுடன் நேருக்கு நேர் வாதிட்டார். பெரியார் ராமன் படத்தை எரித்தார். நடிகவேள் எம்.ஆர்.ராதா கடும் எதிர்ப்புகளுக்கிடையே 'இராமாயணம்' நாடகம் நடத்தினார். நாடகம் தடை செய்யப்பட்டபோது தடையை மீறி கைதானார். புலவர் குழந்தை இராவண காவியம் எழுதினார். அன்றைய காங்கிரஸ் ஆட்சியால் அது தடை செய்யப்பட்டது. மீண்டும் கலைஞர் ஆட்சியில் தடை நீக்கப்பட்டது. ராஜாஜி கல்கியில் எழுதிய இராமாயண தொடருக்கு கலைஞர் முரசொலியில் 'மூக்காஜி' என்று பதிலடி தொடர் எழுதினார். இந்த எதிர்ப்பு இயக்கங்கள் காரணமாகவே தமிழ்நாட்டில் வாரக் கணக்கில் நடந்து வந்த ராமாயண 'கதா காலட்சேபங்கள்' முடிவுக்கு வந்தன. கோயில்களில் விழாக்களில் கூட'கதா காலட்சேபங்கள்' மறைந்து விட்டன.

'ராம ராஜ்ஜிய' கருத்துக்கள் வட மாநிலங்களைப் போல இங்கே வேரூன்ற முடியவில்லை. பாபர் மசூதியை இடித்தபோது வடக்கே எழுந்த கலவரங்கள் இங்கே இல்லாமல் போயின. இன்றைய சூழலுக்கு நவீனத்துவத்தை நோக்கி நகர வேண்டிய நாம் சமகால சாதனையாளர்களைப் பாராட்டாமல் புராண நாயகர்களைப் பாராட்டிக் கொண்டிருக்க வேண்டுமா? என்ற கேள்விகளும் எழுகின்றன. சமத்துவப் பண்பாட்டு விழாக்களான காதலர் நாள், குடும்ப விழா, ஜாதி மறுப்பு இணையர் கூடுகையை நாம் நடத்தியிருக்கிறோம்.

நவீனத்துவமும் பகுத்தறிவு பெண் விடுதலை கருத்துக்களும் வாழ்வியலாக பரிணமிக்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்திக் கொண்டுதான் புராண இதிகாச கட்டுடைப்புகளையும் இயக்கமாக்கி வருகிறோம். அதற்கான தேவை இருக்கிறது. ஈழ விடுதலைக்குப் போராடிய மாவீரன் பிரபாகரன், சிங்கள பேரினவாத எதிர்ப்புக்கு மாவீரன் இராவணனை அடையாளமாக்கினார். இராவணைப் போற்றும் இராமாயணத் தொடரை விடுதலைப் புலிகளின் வானொலி தொடர்ந்து இரண்டுமுறை 52 வாரங்கள் ஒலிபரப்பி பிறகு பிராபகரன் முன்னுரையுடன் நூலாக வெளியிட்டது.

நாம் எந்த ஆயுதத்தை எடுக்க வேண்டும் என்று எதிரிகளே தீர்மானிக்கிறார்கள். அரசுத் தொலைக்காட்சியில் வெளிவந்த இராமயணத் தொடர் தான் 'ராம ஜென்ம பூமி' இயக்கத்துக்கு வித்திட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். செயற்கை தொழில்நுட்ப காலத்தில் அதே தொழில்நுட்பங்களோடு பல்லாயிரம் கோடி ரூபாய் செலவில் 'ராமாயணம்' திரைப்படம் வெளிவந்திருக்கிறது. இந்தியா முழுவதும் திரையிடப்பட்டு ராமனை கதாநாயகனாகச் சித்தரித்து பார்ப்பனியத்துக்கு உயிரூட்டும் முயற்சிகள் நடக்கின்றன. இந்துத்துவாவுக்கு இங்கே களம் தயாரிக்கப்படுகிறது. மோடி பிரதமராக இருந்தாலும் ராமன் சிலையைத் தொட்டு 'பிரதிஷ்டை' செய்யும் உரிமை அவருக்கு இல்லை என்று பார்ப்பன சங்கராச்சாரிகள் அறிவித்து விழாவில் பங்கேற்க மறுக்கிறார்கள். ஆனாலும் பார்ப்பனியத்தின் அடிமையான மோடி இதைக் கண்டிக்காமல் கடந்து செல்கிறார்.

அயோத்தி ராமன் கோயிலை இந்தியாவின் தேசியச் சின்னம் என்று அறிவிக்கிறார்கள். இந்தச் சூழலில் இராமாயணத்தையும் புராணங்களையும் கட்டுடைக்கும் இயக்கங்களை நாம் எப்படி தவிர்க்க முடியும்?. பெரியார் இயக்கங்களைத் தவிர வேறு மதவாத எதிர்ப்பு இயக்கங்கள் இதைச் செய்வது இல்லையே என்பதே நமது வருத்தமாகவும் ஏக்கமாகவும் இருக்கிறது.

ராமன், கிருஷ்ணன், பகவத் கீதையை கடுமையாக விமர்சித்தார் அம்பேத்கர். பவுத்தம் தழுவிய போது எடுத்த உறுதிமொழிகளில் ஒன்று இந்துப் பண்டிகைகளைக் கொண்டாட மாட்டோம் என்பதாகும். ஆனால் இந்துத்துவ எதிர்ப்பில் உறுதியாக நிற்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தீபாவளி கொண்டாடச் சொல்லுகிறது. கழகத்தின் இந்நிகழ்வுக்கு முகநூலில் கண்டனங்களைப் பதிவு செய்கிறார்கள். தீபாவளி கொண்டாடும் இந்துக்கள் அமாவாசை நாள் என்று கூறி அசைவ உணவு தீட்டானது என்று பார்ப்பனியக் கருத்தியலை கண்மூடி ஏற்றுக் கொண்டு அன்றைய நாளில் சைவத்துக்கு மாறி பார்ப்பனியத்துக்கு அடிபணிகிறார்கள். இந்துக்கள் வெடித்துப் போட்ட பட்டாசுக் குப்பைகளை ஒடுக்கப்பட்ட சமூத்தினரான தூய்மைப் பணியாளர்கள் இரவும்பகலும் நச்சுக் காற்றை சுவாசித்துக் கொண்டு சுத்தம் செய்கிறார்கள். 'இந்துவாக பிறந்தேன்; இந்துவாக சாகமாட்டேன்' என்று பிரகடனம் செய்த அம்பேத்கரின் கொள்கைகளை உறுதியாகப் பற்றி நிற்கும் தோழர் திருமாவளவன் அவர்களே தீபாவளியைக் கொண்டாடுங்கள் என்று கூறி தனது அலுவலகத்தில் பட்டாசு வெடிப்பதைப் பார்க்கும்போது நமக்கு வியப்பாகவே இருக்கிறது. இந்து பார்ப்பனியப் பண்பாடுகளை எதிர்க்காமல் இந்துத்துவ எதிர்ப்பு அரசியல் பேசுவது மரங்களை விட்டுவிட்டு கிளைகளை வெட்டுவது ஆகாதா?

இந்தியாவை இந்து இராஷ்டிரமாக மாற்றியமைப்பதற்கு இந்து பண்டிகைகளும், சடங்குகளும், சம்பிரதாயங்களும் பார்ப்பனியத்துக்கு தேவைப்படுகிறது. பார்ப்பனியம் கட்டமைத்த பண்டிகைகளையும், இதிகாசங்களையும் எதிர்த்து களமாட வேண்டியது வரலாற்றுத் தேவை. வாக்கு அரசியலில் பங்கேற்காத பெரியார், அம்பேத்கர் கொள்கைக்காகவே இயங்கி வரும் பெரியார் இயக்கங்கள் இந்தக் களத்தில் ஒருபோதும் பின்வாங்காது; தொடர்ந்து உறுதியுடன் போராடும்! போராடிக் கொண்டே இருக்கும் என்று நரகாசுரனின் வீரவணக்க நாளில் சூளுரைப்போம்" இவ்வாறு விடுதலை இராசேந்திரன் பேசினார்.

இட ஒதுக்கீடு பகிரப்பட்ட வரலாறு

குமாரபாளையம் கூட்டத்தில் கொளத்தூர் மணி பேச்சு (3)

செப்-29 அன்று குமாரபாளையத்தில் கழகம் நடத்திய பெரியார் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் 'பெரியாரின் போராட்டங்களும், மனித நேயமும்' என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை கடந்த இதழின் தொடர்ச்சி.....

நம்முடைய அரசர்கள் இருந்த காலத்தில் தமிழ்ச் சமூகம் எப்படி இருந்தது என்பதைப் பார்க்க வேண்டும். சங்க இலக்கியங்களைப் படித்தவர்களுக்கு இது தெரியும். சங்க இலக்கியங்களைப் படைத்த புலவர்களில் நான்கைந்து பேருடைய பெயர்களைச் சொன்னாலே தமிழ்ச் சமூகம் எப்படி இருந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். கொல்லன் அழிசி என்பவரும், கூலவாணிகள் சாத்தன் என்பவரும் பாடல்களை எழுதியுள்ளனர். கூலவாணிகன் என்றால் தானிய வணிகர், பேரையூர் பெருந்தச்சன் பாடல் எழுதியிருக்கிறார். வெண்ணிக் குயத்தியார் பாடல் எழுதியிருக்கிறார். குறமகள் இளவெயினி பாடல் எழுதியிருக்கிறார்.

இவர்களெல்லாம் யார்? கொல்லர் தொழில் செய்பவர்கள், தானிய வணிகர்கள், தச்சுத் தொழில் செய்பவர்கள், குயவர் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், குறவர் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், இப்படிப் பல்வேறு தொழில்களைச் செய்தவர்களும் இலக்கியங்களைப் படைத்திருக்கிறார்கள். பெண்களும் பாடல்களை எழுதியிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? உயர்ந்த இலக்கியங்களைப் படைக்கக்கூடிய கல்வியறிவு எல்லாச் சமூக மக்களிடமும் இருந்திருக்கிறது.

பெரியாரும் அம்பேத்கரும் புத்தர் மாநாட்டுக்காகச் சென்றிருந்தபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய இடம் வழங்கப்படாதது குறித்து பெரியார் அம்பேத்கரிடம் கேள்வி எழுப்பியதாகக் கூறப்படுகிறது. அதற்கு அம்பேத்கர், அரசியல் சட்டத்தை எழுதும்போது தாம் எதிர்கொண்ட நெருக்கடிகளை விளக்கினார்.

ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவரிடமும் கல்வியறிவு இருந்திருக்கிறது. அப்படியானால், ஒரு கேள்வி எழுகிறது. இவ்வளவு உயர்ந்த கல்வியறிவைப் பெற்றிருந்த தமிழ்ச் சமூகத்தில், நம்முடைய தாத்தாக்கள் ஏன் கல்வியறிவு இல்லாதவர்களாக இருந்தார்கள்? இது எப்படி நடந்திருக்க முடியும்? சங்ககாலத்தில் கல்வியறிவு பெற்றிருந்த சமூகம் தொடர்ந்து வளர்ந்துகொண்டுதானே வந்திருக்க வேண்டும்? ஆனால், இடையில் ஏதோ ஒரு தத்துவம் நுழைந்திருக்கிறது. அந்தத் தத்துவம் நம்மை மயக்கியிருக்கிறது. குழப்பியிருக்கிறது. நம்மிடமிருந்த கல்வி உரிமையைப் பறித்திருக்கிறது.

அதனால்தான் தமிழ்ச் சமூகம் கல்வியறிவை இழந்த நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த நிலையிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்காகத்தான் கயமரியாதை இயக்கம் தோன்றியது. பார்ப்பனரல்லாதார் இயக்கமும் பிற சமூகநீதி இயக்கங்களும் தோன்றின.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் சார்பில் நீதிக்கட்சி தேர்தலில் போட்டியிட்டு ஆட்சிக்கு வந்தது. 1920ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது. அப்போது இரட்டை ஆட்சி முறை நடைமுறையில் இருந்தது. அதாவது, தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அமைச்சர்களுக்கு முழுமையான அதிகாரம் கிடையாது. குறிப்பிட்ட சில துறைகளின் அதிகாரங்கள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. இப்போதும் ஏறக்குறைய அப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது. அன்றைக்கு நிதித்துறை, காவல்துறை போன்ற முக்கியமான அதிகாரங்கள் ஆங்கிலேயர்களிடம்தான் இருந்தன. நிதி அவர்களுடைய கையில் இருந்தது. காவல்துறை அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்தது. முக்கியமான நிர்வாக அதிகாரங்களும் அவர்களிடம்தான் இருந்தன.

நம்முடைய அமைச்சர்களுக்கு என்னென்ன துறைகள் இருந்தன? பள்ளிக்கூடங்கள், கல்வி, சாலை வசதிகள், பதிவுத்துறை போன்ற சில துறைகள்தான் இருந்தன. இதைத்தான் இரட்டை ஆட்சி என்று அழைத்தார்கள். 1935ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் கூடுதலான அதிகாரங்கள் இந்தியர்களிடம் வந்தன. இப்படிப்பட்ட வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் நடைபெற்ற தேர்தலில்தான் நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்த பிறகு, அனைத்துச் சமூக மக்களுக்கும் உரிய வாய்ப்புகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று நீதிக்கட்சித் தலைவர்கள் சிந்தித்தார்கள். அதற்காக ஒவ்வொரு கட்டமாக முயற்சிகளை மேற்கொண்டார்கள், அனைவருக்கும் உரிய பங்கை வழங்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய நோக்கம். அதை எப்படிப் பகிர்ந்தளிப்பது ? இப்போது ஒரு பொருளைப் பல கூறுகளாகப் பிரித்துப் பங்கிடுவதைப் போல அரசுப் பதவிகளையும் வாய்ப்புகளையும் அனைத்துச் சமூகத்தினருக்கும் உரிய முறையில் பிரித்தளிக்க வேண்டும் என்று கருதினார்கள்.

அந்தக் காலத்தில் இடஒதுக்கீட்டை எப்படிப் பிரித்துக் கொடுத்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.கடைகளில் இறைச்சியைப் பன்னிரண்டு கூறுகளாகப் பிரித்து விற்பதைப் போல, மொத்த வாய்ப்புகளையும் பன்னிரண்டு பங்குகளாகப் பிரித்தார்கள். அதில் இரண்டு பங்குகளைப் பார்ப்பனர்களுக்கு வழங்கினார்கள். பன்னிரண்டு பங்குகளில் ஒரு பங்கு என்பது 8.3 விழுக்காடு. தோராயமாக எட்டு விழுக்காடு என்று வைத்துக்கொள்ளலாம். அப்படியானால், இரண்டு பங்குகள் என்பது ஏறத்தாழ 16 விழுக்காடு. அடுத்ததாகப் பார்ப்பனரல்லாத மக்களுக்கு ஐந்து பங்குகள் வழங்கப்பட்டன. அது ஏறத்தாழ 40 விழுக்காடு, சில்லறைக் கணக்கையும் சேர்த்தால் 44 விழுக்காடு என்று சொல்லலாம்.இஸ்லாமியர்களுக்கு இரண்டு பங்குகள், கிறிஸ்தவர்களுக்கு இரண்டு பங்குகள், அன்றைக்குத் 'தீண்டத்தகாத மக்கள்' என்று பிரித்து வைக்கப்பட்டிருந்த மக்களுக்கு ஒரு பங்கு என ஒதுக்கினார்கள். அந்த ஒரு பங்கு என்பது 8.3 விழுக்காடு. பின்னர் காலப்போக்கில் இந்த முறை மாற்றப்பட்டது. பன்னிரண்டு பங்குகளாக இருந்ததைப் பதினான்கு பங்குகளாக மாற்றினார்கள்.

ஏன் மாற்றினார்கள்? இன்றைக்கு நாம் உள் இடஒதுக்கீட்டைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம் அல்லவா? அதுபோன்ற ஒரு பிரச்சினை அன்றைக்கும் இருந்தது. முதலில் பார்ப்பனரல்லாத இந்துக்கள் அனைவரையும் ஒரே பிரிவாக வைத்திருந்தார்கள். ஆனால், அந்தப் பிரிவில் இருந்த ஆறு ஜாதிகளைச் சேர்ந்தவர்களே பெரும்பாலான இடங்களைப் பெற்றுக்கொண்டார்கள். பெரியார் இதைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஆறு ஜாதிகளைச் சேர்ந்தவர்களே அந்த இடஒதுக்கீட்டு வாய்ப்புகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டார்கள் என்று கூறுவார்.

எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனியாக இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அதன் அடிப்படையில் பன்னிரண்டு பங்குகள் பதினான்கு பங்குகளாக மாற்றப்பட்டன. பார்ப்பனர்களுக்கு இரண்டு பங்குகள் வழங்கப்பட்டன. பதினான்கு பங்குகளில் இரண்டு பங்குகள் என்பது ஏறத்தாழ 14 விழுக்காடு, அதனால், அவர்களுடைய இடஒதுக்கீட்டு விழுக்காடு குறைந்தது. பார்ப்பனரல்லாத மக்களுக்கு முன்புபோலவே ஐந்து பங்குகள் வழங்கப்பட்டன. பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனியாக இரண்டு பங்குகள் வழங்கப்பட்டன. இஸ்லாமியர்களுக்கு ஒரு பங்கு, கிறிஸ்தவர்களுக்கு ஒரு பங்கு,தீண்டத்தகாதவர்கள் என்று அழைக்கப்பட்ட மக்களுக்கு இரண்டு பங்குகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் அந்த மக்களுக்கு ஏறத்தாழ 14 விழுக்காடு இடஒதுக்கீடு கிடைத்தது.

நீதிக்கட்சி ஆட்சியிலும் அதைத் தொடர்ந்து ஆளும் தீண்டத்தகாதவர்கள் என்று அழைக்கப்பட்ட மக்களுக்கு 14 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், 1943ஆம் ஆண்டில் அம்பேத்கர் வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினராக இருந்தபோதுதான் இந்திய அளவில் பட்டியலின மக்களுக்கு 8.3 விழுக்காடு இடஒதுக்கீட்டைப் பெற்றுத்தர முடிந்தது. ஆனால், இங்கே நாம் அதற்கு முன்பே 14 விழுக்காடு இட ஒதுக்கீட்டைப் பெற்றிருந்தோம். இப்படித்தான் இடஒதுக்கீட்டு முறை வளர்ந்துகொண்டிருந்தது.

அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட காலத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகள் தொடர்பாகப் பல்வேறு சிக்கல்கள் நிலவின. அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது ஏற்பட்ட நெருக்கடிகள் குறித்து விரிவாகப் பேசுவதற்கு இங்கு நேரமில்லை. எனினும், அம்பேத்கர் மற்றும் பெரியார் இடையே நடைபெற்றதாகக் கூறப்படும் ஓர் உரையாடல், அன்றைய சூழலைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

பெரியாரும் அம்பேத்கரும் புத்தர் மாநாட்டுக்காகச் சென்றிருந்தபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய இடம் வழங்கப்படாதது குறித்து பெரியார் அம்பேத்கரிடம் கேள்வி எழுப்பியதாகக் கூறப்படுகிறது. அதற்கு அம்பேத்கர், அரசியல் சட்டத்தை எழுதும்போது தாம் எதிர்கொண்ட நெருக்கடிகளை விளக்கியதாக அந்த நிகழ்வு எடுத்துரைக்கப்படுகிறது. அத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியில்தான் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது என்பதை இந்த உரையாடல் உணர்த்துகிறது.

அரசியல் சட்டத்தில் இடஒதுக்கீடு விழுக்காடு அடிப்படையில் அமைந்தது. அதற்கு முன்பு சென்னை மாகாணத்தில் 100 இடங்களையும் பிரித்துக் கொடுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை நடைமுறையில் இருந்தது. ஆனால், அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டபோது இடஒதுக்கீடு விழுக்காடு அடிப்படையில் அமைந்தது. அப்போது, இடஒதுக்கீடு அதிகமாக இருந்தால் தகுதி குறைந்துவிடும் என்ற அச்சத்தைப் போக்குவதற்காக, குறைவான இடங்களே வழங்கப்படும் என்றும் அதனால் தகுதி பாதிக்கப்படாது என்றும் அம்பேத்கர் சமாதானப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. அந்தச் சூழலில் கூறப்பட்ட கருத்துகளை எடுத்துக்கொண்டு, இன்றுவரை 50 விழுக்காட்டுக்கு மேல் இடஒதுக்கீடு வழங்கக் கூடாது என்று வாதிடுபவர்கள் இருக்கிறார்கள். அம்பேத்கர் கூறிய அனைத்தையும் ஏற்றுக்கொள்ளாதவர்கள், தங்களுக்கு வசதியான ஒரு கருத்தை மட்டும் தொடர்ந்து மேற்கோள் காட்டுகிறார்கள். அம்பேத்கர் கூறியவற்றில் எத்தனையை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வியும் எழுகிறது.

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் நடைமுறையில் இருந்த இடஒதுக்கீட்டு முறையைப் புரிந்துகொள்வது அவசியம். ஒரு காலத்தில் மொத்தம் 330 மருத்துவக் கல்லூரி இடங்கள் இருந்தன. அவற்றில் 17 இடங்கள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தும் வெளிமாநிலங்களில் வாழ்ந்த தமிழர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. மேலும், 13 இடங்களை முதலமைச்சரோ மருத்துவக் கல்வி இயக்குநரோ இணைந்து தங்களுக்குரிய விருப்ப அதிகாரத்தின் அடிப்படையில் வழங்க முடியும் என்ற நடைமுறையும் இருந்தது.

காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் மருத்துவக் கல்வி இயக்குநர் மாணவர் சேர்க்கைப் பட்டியலை அவரிடம் கொண்டு சென்றபோது, காமராசர் அதை உடனடியாகப் பார்த்து ஒப்புதல் அளித்ததாக ஒரு நிகழ்வு கூறப்படுகிறது. பட்டியலைக் கொடுத்துவிட்டு மீண்டும் எப்போது வர வேண்டும் என்று அதிகாரி கேட்டபோது, காமராசர், "உட்காருங்கள்; வாங்கிக்கொண்டு போங்கள்" என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது.

பெற்றோரின் கையொப்பம் இட வேண்டிய இடங்களில் கையொப்பமிடத் தெரியாதவர்களின் பிள்ளைகளும் மருத்துவராக வர வேண்டும் என்பதற்காகவே அந்த இடங்களை வழங்கியதாக அவர் விளக்கியதாகக் கூறப்படுகிறது. கல்வி வாய்ப்பு என்பது ஏற்கெனவே வசதி பெற்றவர்களுக்கு மட்டும் உரியதல்ல; கல்வி மறுக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற சமூகநீதிப் பார்வை அதில் வெளிப்படுகிறது.

காமராசர் பள்ளிகளைத் திறந்தார் என்று பாராட்டும்போது, அதற்கு முன்பு மூடப்பட்ட பள்ளிகள் பற்றியும் பேச வேண்டும். ராஜாஜி ஆட்சியில் மூடப்பட்ட பள்ளிகளைப் பெரியார் எதிர்த்தார்; பின்னர் காமராசர் ஆட்சியில் கல்வி வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட்டன என்ற வரலாற்றுப் பின்னணியையும் மறந்துவிடக் கூடாது. மீதமிருந்த 300 மருத்துவக் கல்லூரி இடங்களும் சென்னை போன்ற நகரங்களுக்கே சென்றுவிடக் கூடாது என்பதற்காக, சென்னை மாகாணம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் 75 இடங்கள் என ஒதுக்கப்பட்டன. அதிலும் பெண்களுக்கு 20 விழுக்காடு இடங்கள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. தேவைப்பட்டால் தகுதியில் தளர்வு அளித்தாவது பெண்களுக்கு அந்த இடங்களை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாடும் முன்வைக்கப்பட்டது.

இன்று பெண்களுக்கான இடஒதுக்கீடு குறித்து அறிவிக்கப்படும் முடிவுகளுக்குப் பாராட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால், பல ஆண்டுகளுக்கு முன்பே பெண்களுக்கு இடம் வழங்குவதற்கான நடைமுறைகளை உருவாக்கிய சமூகநீதிப் போராட்டங்களையும் நினைவுகூர வேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் செண்பகம் துரைராஜன் வழக்கு முக்கியமாகப் பேசப்பட்டது. மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கை மற்றும் அரசுப் பணித் தேர்வு தொடர்பாகப் பார்ப்பனர்களால் தொடரப்பட்ட வழக்குகள், அன்றைய சமூகநீதிப் போராட்டத்தின் தீவிரத்தை வெளிப்படுத்தின. வழக்குத் தொடர்ந்தவர்களுக்காகவும் அரசின் சார்பாகவும் வழக்கறிஞர்கள் வாதிட்டனர். இடம் ஒதுக்கி வைக்கப்படும் என்ற உறுதிமொழிகளும் வழங்கப்பட்டன. பின்னர் வழக்கு உச்சநீதிமன்றத்துக்குச் சென்றபோது, விண்ணப்பமே செய்யாதவருக்காக இடத்தை ஒதுக்கி வைப்பது உள்ளிட்ட நடைமுறைகள் குறித்த கேள்விகள் எழுந்தன. வயது வரம்பு போன்ற நிபந்தனைகளும் அந்த வழக்கில் விவாதிக்கப்பட்டன.

1921ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை, பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகே நடைமுறையில் வலுப்பெற்றது. அரசியல் சட்டத்தின் பெயரால் அந்த உரிமை பறிக்கப்பட்டதாகப் பெரியார் கருதினார். பல ஆண்டுகளாக மக்கள் அனுபவித்த உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்த்து அவர் போராட்டங்களை அறிவித்தார். வகுப்புரிமை மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், தலையங்கங்கள், போராட்டங்கள் எனத் தொடர்ந்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

தொடரும்.....

பாஜகவை மகிழ்விக்க குரியன் ஜோசப் ஆணையம் கலைப்பா?

மாநில உரிமைகள் குறித்து ஆராய திமுக ஆட்சியில் நியமிக்கப்பட்ட குரியன் நீதிபதி ஜோசப் குழுவைக் கலைத்து தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது மிகவும் அற்பத்தனமான நடவடிக்கையாகும். இது வன்மையானக் கண்டனத்துக்குரியது. திமுக ஆட்சியில் நியமிக்கப்பட்டது என்ற ஒரே காரணத்துக்காக மாநில உரிமைகளே தங்களுக்குத் தேவை இல்லை என்று காட்டுவது போல ஒன்றிய ஆட்சியை மகிழ்விக்கும் இந்த முடிவை தவெக ஆட்சி எடுத்திருக்கிறது.

இந்தக் குழுவைக் கலைப்பதற்கு காரணம் கண்டுபிடித்திருக்கிற 'அறிவாளிகளுக்'கு நோபல் பரிசுதான் தரவேண்டும். அதாவது இந்த குழுவுக்கு சட்ட அங்கீகாரம் இல்லை என்று கூறி, தமிழ்நாடு அரசின் சட்ட ஆணையத்திடம் குழுவின் பரிந்துரைகளை ஒப்படைத்திருக்கிறார்கள். அந்தச் சட்ட ஆணையமே சட்ட அங்கீகாரம் பெற்றதில்லை என்பது கூட இந்த அதிமேதாவி ஆட்சிக்குத் தெரியவில்லை.

ஒன்றிய பாஜக ஆட்சி மாநில உரிமைகளைப் படிப்படியாக பறித்து ஒற்றை ஆட்சி நோக்கி நாட்டைக் கொண்டுபோகும் நிலையில் இந்த ஆணையத்தின் செயல்பாடு எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு அரசியல் பக்குவம் வேண்டும். இந்த ஆட்சியிடம் அதை எதிர்பார்க்க முடியாது.

தமிழ்நாட்டில் சமூக நீதி ஆய்வு மையம் ஒன்றை அமைக்கப் போவதாக கடந்த அக்டோபர் 29ஆம் தேதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த ஆய்வையும் சட்ட ஆணையத்திடமே ஒப்படைத்திருக்கலாமே; எதற்காக வேறு ஒரு ஆணையம்? இதிலிருந்து இவர்கள் இந்தக் குழுவைக் கலைப்பதற்குக் காரணம் அப்பட்டமான கட்சி அரசியல் என்பது பச்சையாகத் தெரிகிறது. சமூக நீதிக்குக் குழிபறிக்கும் ஒன்றிய ஆட்சியின் அண்மைக்காலச் செயல்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் விஜய் ஆட்சி குறட்டை விட்டுத் தூங்குகிறது.

மத்திய அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கு கிரிமிலேயர் என்ற வருமான வரம்பை 1993ல் அறிமுகப்படுத்தியபோது பெற்றோரின் மாத ஊதியம் மற்றும் விவசாயம் மூலம் வரும் வரவு ஆகியவற்றை வருமான வரம்பில் சேர்க்கக் கூடாது என்று அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான வழக்கில் ஒன்றிய ஆட்சி கிரிமிலேயரில் மாத ஊதியத்தையும் விவசாய வருமானத்தையும் சேர்க்க வேண்டும் என்று சமூக நீதிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வாதாடியது. நவ.7, உச்சநீதிமன்றம் ஒன்றிய ஆட்சியின் வாதத்தை நிராகரித்திருக்கிறது.

இதே போல் பல்கலைக் கழகங்களில் தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு எதிராக இழைக்கப்படும் பாகுபாடுகள் தண்டனைக்குரிய குற்றம் என்று பல்கலைக்கழக மானியக் குழு விதிகளைத் திருத்தியது. பார்ப்பன மாணவர்கள் இதைக் கடுமையாக எதிர்த்து வட மாநிலங்களில் வீதிகளில் இறங்கி போராடியதோடு தங்களுக்கு எதிராகவும் பாகுபாடு காட்டப்படுகிறது என்ற பச்சைப் பொய்யைக் கூறி இந்த விதியை நீக்க வேண்டும் என்றார்கள். இப்போது பார்ப்பன உயர் ஜாதி பிரிவினரைத் திருப்திப்படுத்த இந்த விதியைத் திரும்பப் பெற ஒன்றிய ஆட்சி முடிவெடுத்திருக்கிறது. திராவிட மாடல் ஆட்சி நடந்திருக்கும் என்று சொன்னால் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடனடியாக இதற்கான கண்டனக் குரலை எழுப்பியிருந்திருப்பார் என்பதை கடந்தகால வரலாறுகள் உணர்த்துகின்றன. ஆனால் இன்றைய ஆட்சி இதற்கெல்லாம் வாய்த் திறந்து ஒரு கண்டனத்தையும் தெரிவிப்பதில்லை. அதே நேரத்தில் மாநில உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அமைப்புகளை கலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய அரசியல் சூழலில் மாநிலங்களுக்கான உரிமை முழக்கம் இந்துத்துவ எதிர்ப்பையும் சமூக நீதி பாதுகாப்பையும் உள்ளடக்கியிருக்கிறது. தமிழ்நாடு அரசின் முடிவுகளை சில சோதிடர்களும் ஒன்றிய ஆட்சியின் கைப்பாவையான சில அதிகாரிகளும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி மாநில உரிமைகளுக்கான குழுவை கலைத்திருப்பதன் வழியாக மாநில உரிமைகளைக் கலைத்துப் போட்டிருக்கிறது.

சங்கவி – திவாகர் பாஷியம் சுயமரியாதை இணையேற்பு விழா

சங்கவி - திவாகர் பாஷியம் சுயமரியாதை இணையேற்பு விழா 30.10.2026 வெள்ளி மாலை 5.30 மணிக்கு சென்னை பெரம்பூர் ரயில் நிலையம் அருகில் உள்ள அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் உமாபதி தலைமை தாங்கினார். வழக்கறிஞர் கான்சியஸ் இளங்கோ முன்னிலை வகித்தார். கழகத் தோழர் வடசென்னை ராஜி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.



சுயமரியாதை இணையேற்பு விழாவை கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், எழுத்தாளர் மதிமாறன், நடிகர் இளவரசன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். நிகழ்வில் கழகத் தோழர்கள் பங்கேற்றனர். கழக ஏட்டுக்கு மணமக்கள் ரூ.5000 நன்கொடை வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்)

பட்டாசு வெடிப்பதை ஏன் நிறுத்தினேன்!

தோழர் ரமேஷ் பெரியார் முகநூல் பதிவு: 2014ம் ஆண்டு திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக தீபாவளியைப் புறக்கணிப்போம் என்ற தலைப்பில் சென்னை ராயப்பேட்டையில் ஒரு கூடுகை ஏற்பாடு செய்யப்பட்டது. தோழர்கள் ஓவியா, வே.மதிமாறன் மற்றும் திவிக பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

அந்த நிகழ்வில் பட்டாசு உற்பத்தி செய்யும் போது ஏற்படும் விபத்துகளில் கை, கால்களை இழந்தவர்கள், பெற்றோர்களை இழந்தவர்கள், குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களின் பேட்டி & பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் இயற்கை பேரழிவு குறித்து ஒரு ஆவணப்படம் திரையிடப்பட்டது.

இறுதியாக தோழர் விடுதலை ராசேந்திரன் அவர்கள் ஒருவேளை தனித் தமிழ்நாடு கிடைத்தாலும், தனி ஈழம் அமைந்தாலும், மூன்று தமிழர்கள் விடுதலை பெற்றாலும் கூட நாம் நம் மகிழ்ச்சியை வெளிப்படுத்த, வெற்றியைக் கொண்டாட பட்டாசு வெடிக்கக் கூடாதென்று அறிவுறுத்தினார்.

அந்நிகழ்விற்கு முன் தீபாவளி அல்லாத நிகழ்வுகளில் நான் பட்டாசு வெடிப்பதுண்டு. குறிப்பாக எங்கள் ஊரில் சவம் எடுக்கும் போது வழி நெடுக பட்டாசு வெடிப்பார்கள். ஊரிலிருந்தால் பெரும்பாலும் நான் தான் சாவு வீட்டில் பட்டாசு வெடிப்பேன். அந்த உரையைக் கேட்ட நான் அதன் பின் என் வாழ்வில் பட்டாசு வெடிக்கவில்லை. இனி ஒருபோதும் பட்டாசு வெடிக்கக்கூடாதென்று உறுதியெடுத்திருக்கின்றேன்.

வாசகர் கடிதம்

டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டில் வெளிவந்த செய்தியை தமிழாக்கம் செய்து சடலங்களைச் சுமக்கும் கழக மகளிர் அணியின் சமூகப் புரட்சி என்ற தலைப்பில் வெளியான செய்தி சிறப்பாக இருக்கிறது. சம்பூகவதை குறித்த எம்.ஆர்.ராதா நாடகத்தினுடைய காட்சிகள் வெளியிட்டது சிறப்பு. இதை வீதி நாடகமாக மக்கள் மத்தியில் கொண்டு சென்றால் சிறப்பாக இருக்கும். கலை மட்டுமே மக்களின் சிந்தனையைத் தூண்டும். எம்.ஆர் ராதா மனிதனுடைய பகுத்தறிவு சிந்தனையைத் தூண்டுவதற்குத் தனது நாடகக் கலையைபயன்படுத்தி இருக்கிறார் என்பதை நம்மால் உணர முடிகிறது.

– மு.சாமிநாதன் (குமாரபாளையம்)

யானைகளை வதைக்கும் இந்து திருவிழாக்கள்

கர்நாடகத்தில் தசரா பண்டிகைகளில் யானைகள் பயன்படுத்தப்படுவது வழக்கம். வழக்கமாக இந்தப் பணியைச் செய்துவந்த யானையின் காலில் காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, 36 வயதான வேறொரு யானை அந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், விழாக்களில் அந்த யானை பயன்படுத்தப்படுவது இதுவே முதல் முறை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, 650 கிலோ எடையுள்ள வெள்ளியிலான அம்பாரியைச் சுமந்து சென்றபோது யானை திடீரென மிரட்சியடைந்ததால் இந்தச் சம்பவம் நேர்ந்தது தெரியவந்திருக்கிறது.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன. 2026 மே 1இல் கேரளத்தின் கிடங்கூர் மகாவிஷ்ணு கோயில் திருவிழாவின்போது, யானைக்கு மதம் பிடித்து மிரண்டு ஓடியதில் லாரி ஓட்டுநர் விஷ்ணு (40) உயிரிழந்தார். அக்டோபர் 18இல் வாராணசியின் ராம்நகரில் ராம்லீலா நிகழ்வுக்காகக் கொண்டுவரப்பட்ட யானை, கட்டுப்பாட்டை இழந்து நடத்திய தாக்குதலில் பாகன் படுகாயமடைந்தார். இத்தகைய திருவிழாக் களின்போது யானையின் முதுகின் மேல் நான்கைந்து பேர் அமர்ந்து கொள்வது, அதிக எடை கொண்ட சுமைகளை ஏற்றுவது போன்றவை நிகழ்த்தப்படுகின்றன. அதிக ஒலி எழுப்பும் வாணவேடிக்கைகள், மேளதாளங்கள் போன்றவையும் யானைகளுக்குத் தொந்தரவு அளிக்கக் கூடியவை.

கேரளத்தில், யானைகள் இணைசேரும் டிசம்பர் முதல் மே வரையிலான காலகட்டத்தில் பல கோயில் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. அத்தகைய சூழலில் யானைகள் தொடர்ந்து வேலை வாங்கப்படும்போது. அவற்றுக்கு இயல்பாக உள்ள மதநீர் சுரக்கும் காலத்தில் தேவையற்ற தொந்தரவாகிறது. இதனால் அவை தாக்குதலில் இறங்குவது போன்ற அசம்பாவிதங்கள் நிகழ்கின்றன. யானைகள் கட்டுப்படுத்தப்பட்ட பின் 'கட்டி அடிக்கை' என்னும் பெயரில் கடுமையாகத் தாக்கப்படுவதும் உண்டு. இதில் பல யானைகள் உயிர் இழந்திருக்கின்றன.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : November 12, 2026

Owned and Published By : K. Rajendran (Editor), From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.

Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776